Registered as a News Paper in Sri Lanka; பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸூ ஐப்பசி மீ 04 உ ஞாயிற்றுக்கிழமை (21 - 10 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 01 ஓசை 236

## தரமற்ற பாண் விற்பனை

(கொழும்புத்துறை)

''பெரும்பாலான பேக்கரிகளில் இருந்து யாழ். மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலைமைகளைப் பயன்படுத்தி தரக்குறைவான வேகவைக்காத பாண்விற்பனை செய்யப்பட்டு வருவது கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது''. இவ்வாறு யாழ். மாவட்ட உணவு, மருந்துப் பரிசோதகர் திரு. ரி. மகாதேவன் தெரிவித்துள்ளார். மக்கள் சொல்லொணாத் துயரமடைந்துள்ள இன்றைய சூழ்நிலையில் மக் (4ஆம் பக்கம் பார்க்க)

### சிறிலங்கா இராணுவத்தின் ஆறாவது கஜபாகு படைப்பிரிவின்

# இரு டாங்கிகள் கட்டுவனில்

# புலிகளால் முற்றாக அழிப்பு

## மயிலிட்டிப் பகுதியில் கடும் மோதல் தொடர்கிறது

(கட்டுவன்)

பலாலி முகாமில் இருந்து நேற்றுக்காலை வாகன சகிதம் கட்டுவன் சந்திக்கு முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தொடுத்த தாக்குதலில் இரண்டு டாங்கிகள் அழிக்கப்பட்டன. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அதே சமயம பலாலி முகாமிலிருந்து மயிலிட்டி ஊடாக காங்கேசன்துறை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருக்குப் புலிகளுக்கும் இடையில் மயிலிட்டிப்பகுதியில் கடும் சண்டை நடைபெற்று வருகின்றது.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் பலாலி முகாமில் இருந்து பல கனரகவாகனங்களுடன் கட்டுவன் சந்தி நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலில் ஆறாவது கஜபாகுப் படைப்பிரிவைச் சேர்ந்த இரண்டுடாங்கிகள் புலிகளின் தாக்குதலால் முற்றாக அழிந்தன. அந்த வாகனத்தில் இருந்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் வடக்கின் மீது நேற்று அகோர வான் தாக்குதல்

(தெல்லிப்பளை)

காங்கேசன்துறை, மாவிட்டபுரம், தெல்லிப்பளை, கட்டுவன் பகுதிகளில் நேற்று சிறிலங்கா இராணுவத்தின் கடும் அகோர ஷெல் தாக்குதல்களும் வான் தாக்குதல்களும் இடம் பெற்றன.

நேற்றையதினம் மயிலிட்டிப் பகுதியால் வெளியேற முற்பட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மிகக் கடுமையான மோதல்கள் இடம் பெற்றன. இப் பகுதியில் செய்தி அச்சுக்குப் போகும் வரை தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இத் தாக்குதலில் சிறிலங்கா இராணுவத்தினருக்கு துணையாக காங்கேசன்துறை பலாலிப் பகுதியிலிருந்தும் கடற்படைப் பீரங்கிப் படகிலிருந்தும் மாவிட்ட புரம் பகு (4ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாகத்தில் அதிகாலையில் விமானத் தாக்குதல்

(மல்லாகம்)

வலிகாமம் வடக்கில் தொடரும் சிறிலங்கா வான்படையின் அகோரத் தாக்குதலுக்கு நேற்று அதிகாலை மீண்டும் மல்லாகம் பகுதிஇலக்கானது. பாடசாலை, எரிபொருள் நிலையம் உட்பட பல கட்டடங்கள் பலத்த சேதத்திற்குள்ளாகின.

நேற்று அதிகாலை 5.30மணியளவில் சிறிலங்காவின் விமானங்களில் ஒன்றான வை - 12 ரக விமானம் போட்ட குண்டினால் சுப்பிரமணியம் (வயது 38) ஆபத்தான நிலையில் உள்ளார். த.ஜெயகாந்தன்(வயது 15) இவர் தனது ஒருகாலை இழந்துள்ளார். செ. டிவான் (வயது 12) செ. ஷெரோம் (வயது 16) இவர்கள் இருவரும் சகோதரர்கள். மு. கருணாநிதி (வயது 23), ந. பாக்கியம் (வயது 42) ஆகியோர் (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரமரணமடைந்த புலிகள் இருபத்திநான்கு; மூன்றுநாளில்

(பலாலி)

பலாலி இராணுவ முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலின் போது கடந்த புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இருபத்திநான்கு போராளிகள் வீரமரணமடைந்துள்ளர். வீரமரணமடைந்த போராளிகளின் விபரம் வருமாறு:

விக்ரர் (புத்தளம்), ஷெல்ரன் (நாவாந்துறை) ஐயர் (புத்தூர்), ராசிக் (பருத்தித்துறை), கிசோபன் (இருபாலை), நெல்சன் (பூநகரி), ரகீம் (சாவகச்சேரி) (4 ஆம் பக்கம் பார்க்க)

## லெப். கேணல் சந்தோசத்தின் 3ம் ஆண்டு நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், திருமலை மாவட்டங்களின் முன்னாள் தளபதி சந்தோசம் மாஸ்டர் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் முன்றலில் இன்று நடைபெறவுள்ளது.

அரியாலை கிழக்கு, மத்தி, மேற்கு சிற்றூரவையினர் ஒழுங்கு செய்துள்ள இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி முக்கியஸ்தர்களும், சிற்றூரவை, வட்ட அவைகளின் உறுப்பினர்களும் உரையாற்றுவார்கள் தொடர்ந்து மரநடுகையும் இடம் பெறும். (மு)

## மேஜர் அன்ரனிக்கு மக்கள் ஆயிரக் கணக்கில் அஞ்சலி

(அலுவலக நிருபர்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்துடன் நேரடியாகத் தீரமுடன் போராடி, வீரமரணமடைந்த முன்னாள் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் மேஜர் அன்ரனி, இளம் புலி நஸார், பெண் போராளி ஆர்த்தி ஆகிய போராளிகளின் புகழுடல்கள் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக ஈச்சமோட்டை சனசமூக நிலைய மண்டபத்தில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பற்றீசியா வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட பெண் போராளி பற்றீசியா (தெய்வமொழி, முள்ளியவளை, முல்லைத்தீவு) வுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (மு)

## வீர வணக்கம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிமோதலில் நேற்று வீரமரணமடைந்த ஆர்த்தி (ஆரையம்பதி)க்கு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் தமது வீரவணக்கத்தை தெரிவித்தனர். (மு)

## சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் சகல மினி பஸ் சங்கங்களின் தலைவர் மற்றும் செயலாளர்களுக்கான மிக முக்கிய சந்திப்பு ஒன்று மக்கள் முன்னணியின் போக்குவரத்துப் பகுதியினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு நாட்களில் 70 படைபலி; 200 மேற்பட்டோர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கடந்த நான்கு நாட்களாக பலாலி முகாமைச் சூழவுள்ள பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த மோதலில் எழுபதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர்கொல்லப்பட்டதாகவும் இருநூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## முல்லைத்தீவு முகாமருகே புலிகள்-இராணுவம்மோதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து நேற்று வெளியேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

நேற்று இந்த முகாமில் இருந்து நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் கனரக வாகனங்கள் சகிதம் வெளியேற முற்பட்டபோது இவர்கள் மீது விடுதலைப்புலிகளால் பலத்த தாக்குதல் தொடுக்கப்பட்டது. இத்தாக்குதலினால் படையினர் பலத்த இழப்புகளுடன் முன்னேற முடியாது முகாமினுள் முடங்கினர். (க)

## புலிகள் - இராணுவம் ஒட்டமாவடியில் மோதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமாவடி இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதில் படையினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இம் முகாமில் இருந்துவெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் நாவலடிச்சந்தி நோக்கி சுமார் ஐந்நூறு யார் தூரம் சென்றதும் விடுதலைப்புலிகள் இவர்களை வழிமறித்து தாக்குதல் நடாத்தியபோது படையினர் வந்த ஜீப் வண்டி முற்றாகச் சேதமடைந்தது.

இதில் வந்த படையினர் பலர் கொல்லப்பட்டிருக்க (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

27-09-90 அன்றுயாழ் நகருக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் ஆழ்வான் - சின்னராசா வதியுமிடம் சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி 580310419 V என்னும் இலக்கமுடைய அடையாள அட்டையைக் கண்டெடுத்தவர்கள்ஈழநாதம் காரியாலயத்திற்கு அல்லது மேற் காணும் விலாசத்திற்கு தயவு செய்து அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (R-752

### தேவை

நன்கு பயிற்றப்பட்ட அனுபவமுடைய தாதிமார் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். சான்றிதழ்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். வைத்திய பொறுப்பதிகாரி, சென்றல் நேர்சிங் ஹோம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (R-736)

### சித்ராலயா ஸ்ருடியோ

சித்ராலயா நிறுவனத்தில் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளை 351, கோவில் வீதி நல்லூர் (கம்பன் கோட்டம் முன்பாக) என்ற முகவரியில் காலை 9 மணி முதல் 12 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். மற்றும் மாலை 2 மணி முதல் 5 மணி வரை புகைப் படம் பிடிக்கப்படும்.

(B/ 1496)

### டில்கா வாச் வேக்ஸ்
### [Dilka Watch Works]

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக் கோட்டையில் (கிராம சபைக் கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு.

(B-1510)

### நியூ வீனஸ்
### NEW VENUS

எமது அன்பான வாடிக்கையாளருக்கு ஒரு வேண்டுகோள் எமது ஸ்தாபனம் 153 A பலாலி வீதியில் (விவசாய பாடசாலை அருகில்)(NEAR FARM SCHOOL) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு.

(B/1509)

## மல்லாகத்தில் இருந்து அகதிகள் இடம் பெயர்வு

(மல்லாகம்)

காங்கேசன்துறைப் பகுதியை அண்டியுள்ள இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்து மல்லாகம் கிறிஸ்தவ தேவாலயத்திலும், பாடசாலைகளிலும் அகதிகளாகத் தங்கியிருந்த பொது மக்கள் மீண்டும் நேற்று முன்தினம் அவ்விடங்களில் இருந்து யாழ்ப்பாணம், தென்மராட்சி போன்ற பகுதிகளிற்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இதை விட தையிட்டிப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களும் நேற்று தம் இருப்பிடங்களை விட்டு வெளியேறி வேறிடங்களிற்குச் சென்றனர். (மு)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 - 2 - 1911 | 21 - 10 - 1988 |

### திரு. வீ. அப்பாத்துரை (அரியாலை)

இறைவன் அருகில் அமர்ந்தீர் போற்றி!

அ. உபயசேகரம் (மகன்)
486, கண்டி வீதி,
அரியாலை.
(R/740)

தங்கள் நினைவில் வாழும்
சகோதரி, மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

## மூன்றாம் வருட நினைவு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 — 03 — 1964 | 21 — 10 — 1987 |

### குருசுமுத்து ஜோண்பீற்றர்
### (சில்றன்)

எங்கள் அன்புச் செல்வமே!

நீர் எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டுகள் மூன்று கடந்தாலும் எங்களது உள்ளமும் உடலும் உம்மையே தேடிக் கலங்குதையா! நீர் இல்லாத எமது குடும்பம் ஒளியிழந்து இருட்டில் வாடுதையா! நீர் இறை அடியில் உமது வாழ்வை மாறுபடுத்தி இறைவனைபே துதி செய்து வருகின்றீர்கள் என்பதுதான் எங்களுக்கு ஆறுதலையும் அமைதியையும் அளிக்கின்றது. எமக்காகவும் நீர் குடிகொண்ட இலட்சியத்தில் இறைவனை வேண்டுமாறு வேண்டுகின்றோம்.

உயரப்புலம், ஆனைக்கோட்டை. — பெற்றோர், உறவினர்.

(R/751)

## 45-ம் நாள் இதய அஞ்சலி



தாயின் மடியில்
08 – 02 – 1970

தாயக மீட்பில்
06 – 09 – 1990

### ஏகநாதன் விஜயானந்தா
### (ஹேமானந்)

(யாழ். இந்துக் கல்லூரி மாணவன்)

கல்லறைக்குள் ஒரு காவிய நாயகன்
அவன் கண்களிலே பல இலட்சிய கனவுகள்
பண்பினால் அவன் பகைவனை வென்றவன்
அன்பினால் அவன் எமது நண்பன்
ஆனால் இன்று அவன் எம்மை
விட்டுப் பிரிந்த இலட்சிய வீரன்.

(ஆர்-748) — யாழ். இந்து நண்பர்கள்

## ஈராண்டு நினைவஞ்சலி



தமிழீழ மக்கள் மன்றத் தலைவர்
மாண்புமிகு

### திரு. க. சிவானந்தசுந்தரம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 7—1—1923 | 21—10—1988 |

நீங்கள் கொண்ட லட்சியமும் உங்கள கனவும் நிச்சயம் நிறைவேறும்.
மலர்க தமிழீழம்

(B/1515) — நண்பர்கள்

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி





திரு.
தொமஸ் பேரின்பநாயகம் வஸ்தியாம்பிள்ளை
(வஸ்தியன் புத்தகசாலை உரிமையாளர்)
பிறப்பு: 22-09-1921

திருமதி
பேர்ள் அரியமலர் வஸ்தியாம்பிள்ளை
பிறப்பு: 11-07-1927

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தினால்
அழிப்பு: 22-10-1987



| பிறப்பு: | அழிப்பு: |
|---|---|
| 04 - 02 - 1967 | 21 - 10 - 1987 |

### செல்வி நொயலா விஜயந்தி வஸ்தியாம்பிள்ளை

ஆண்டுகள் மூன்று சென்றிடினும் உங்கள் இனிய நினைவுகள் எம்மைவிட்டு நீங்காது.

உங்கள் பிரிவால் வாடும்;
அன்புப் பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்.

390, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(R-750)

## சிந்தனைக்கு

*நூல்களை விட நுட்பமான நோக்குதல்,*
*ஆட்களை விட அனுபவம் இவையே*
*கல்வி புகட்டும் தலையாய ஆசான்கள்.*

— ஏமாஸ் பிரான்ஸன் ஆல்காட்

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 21-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# சர்ச்சைக்கு இடமில்லை

“இலங்கையின் ஒற்றுமைக்கும், அமைதிக்கும் நீர் கூறும் வழிவகைகள் என்ன?” பத்தாம் ஆண்டு மாணவர்களுக்கு இவ்வாரம் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கல்வி நிறுவனமொன்றில் வழங்கப்பட்ட கட்டுரைக்கான தலைப்பு இது.

இலங்கைத்தீவில் இருந்து பிரித்தானியர் வெளியேறிய பின்னர் தமிழர்கள், ஐக்கிய இலங்கைக்குள் தமது பிரச்சினைகளைத் தீர்க்க எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வி கண்ட பின்பே, தமிழர் பாதுகாப்புடனும், சுதந்திரத்துடனும் வாழவேண்டுமானால், இலங்கைத் தீவில் அவர்களுக்கென்றொரு நாடு அமைக்கப்பட வேண்டும் என்ற முடிவிற்கு வந்தனர். முதலில் சாத்வீக ரீதியாக ஆரம்பித்த போராட்டங்கள் சிங்கள அரசாங்கங்களினால் ஆயுதத்தின் துணைகொண்டு அடக்கப்பட்டது. அதைத் தொடர்ந்தே தமிழரின் ஆயுதப் போராட்டம் வளர்ச்சி அடைந்தது.

இன்றைய மாணவர் சமுதாயம் போராட்டச் சூழலிலேயே பிறந்து, போராட்டச் சூழலிலேயே வாழ்பவர்கள். அவர்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்புடனும் வாழவேண்டுமாயின் சிறிலங்கா பௌத்த சிங்கள அரசாங்கத்துடன் போரிட்டே ஆக வேண்டும் என்ற உண்மையை நேரடியாக உணர்ந்துள்ளவர்கள். அதாவது தமது வாழ்க்கைக்காகவும், பாதுகாப்பிற்காகவும் போராடியே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளவர்கள். ஏனெனில் பெற்றோரோ, ஆசிரியர்களோ இவர்கள் பாதுகாப்பையும் எதிர் காலத்தையும் உறுதி செய்ய முடியாதவர்கள்.

இம் மாணவர்களிடம் இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு என்பன பற்றிப் பேசுவது கடந்தகால தமிழரின் வரலாற்றை மறைப்பதற்கு ஒப்பான செயலாகும். அத்தோடு இன்றைய போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் செயலுமாகும்.

---

இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு என்பன சிறிலங்கா பேரினவாதிகளின் கோட்பாடு. அதாவது ஐக்கியப்பட்ட இலங்கைத் தீவுக்குள் சிங்களவர்களின் அடிமைகளாக தமிழர்கள் வாழ வேண்டும் என்பதைப் பிரதிபலிக்கும் சித்தாந்தம்.

தமிழர் ஒரு தேசிய இனம், அவர்களுக்கு தனித்து வாழ்வதற்கான சகல உரிமைகளும் உண்டு அவர்களிடம் தனித்து நின்று தமது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கு போதிய வளங்களும் உண்டு.

இன்றும் தமிழர் மத்தியில் தனித்து வாழ போதிய வளம் எம்மிடம் இல்லை எனக் கூறுபவர்களும் உண்டு. அவர்கள் அவ்வாறு கூறுவதற்கு அவர்கள் உண்மை நிலையைப் புரிந்துகொள்ளாமையேகாரணமாகும். உலகில் தமிழீழ நிலப்பரப்பையும், மக்களையும், வளத்தையும்விட மிகக்குறைந்த, சிறியளவினதான நாடுகள் பல உண்டு. ஒரு நாட்டின் வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் முக்கிய காரணம் மக்களின் முயற்சியும், கடின உழைப்புமே ஒழிய பரந்த பரப்புக்கள் அல்ல.

இன்றைய நிலையில் தமிழ்மாணவர்களுக்கு கல்வியில் புகுத்தப்பட வேண்டியது தமிழர் வரலாறு, தமிழர் போராட்டங்கள், தமிழீழவளம் என்பன பற்றியவையே தவிர இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு என்பனவல்ல, இவைகள் தமிழரைப்பொறுத்து காலம்கடந்த விடயங்கள்.

இலங்கையில் இன்று ஐக்கியம், ஒருமைப்பாடு பற்றிப் பேசுவதென்றால் அதனைச் சிங்கள புத்திஜீவிகளும், சிங்கள மாணவர்களும் பேசட்டும்; ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தமிழர்களது பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காணலாம்; அமைதியை எவ்வாறு ஏற்படுத்தலாம் என ஆராய்ந்து சிறிலங்கா அரசாங்கத்திற்கு தீர்வுகளை முன் வைக்கட்டும்.

அவ்வாறு அவர்கள் வைக்கும் தீர்வுகள் தமிழரின் சுயநிர்ணய உரிமையையும் பாதுகாப்பையும் உறுதிப் படுத்துவதாக இருந்து அதை சிறிலங்கா அரசாங்கம் தமிழர் முன்வைக்குமானால் ஒன்றுபட்ட இலங்கைக்குள் பிரச்சினையைத் தீர்ப்பதைப்பற்றித் தமிழர் யோசிக்கலாம்.

அதைவிடுத்து இன்றையநிலையில் தமிழர் இலங்கைத் தீவில் ஐக்கியம் ஒருமைப்பாடு பற்றிப் பேசுவது சிங்கள இனவாத அரசாங்கத்திற்குக் கீழ் அடிமைவாழ்விற்கு இடம் தேடுவதற்கு ஒப்பானதாகும். அத்தோடு தமிழ் மாணவர்களுக்கு ஐக்கியம் பற்றிப் போதிப்பது கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும் நிகழும் தமிழர் போராட்டங்களை மழுங்கடிப்பதுமாகும். இதனை இன்னும் இந்த ஆசிரியர்கள் உணரவில்லையா?

# லெப். கேணல் சந்தோஷம் மாஸ்டர்
# 3ஆம் ஆண்டு நினைவுநாள் இன்று

தமிழீழ மண்ணின் வீர மைந்தன், வீரஉணர்வுமிக்க தொரு வேங்கை, விடுதலையின் பால் நாட்டம்கொண்ட தளபதி சந்தோஷம் மாஸ்டர் என அழைக்கப்பட்ட லெப். கேணல் சந்தோஷம் (உமை நேசன் அரியாலை) அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவுநாள் இன்றாகும்.

நிமிர்ந்த நெஞ்சுடன் பதினேழு புலிவீரர்களின் துணையோடு படையணி வகுத்து திருக்கோணமலை மாவட்டத்தில் முதல் கால் பதித்த விடுதலைப் புலிகள் திருமலைத் தளபதி சந்தோஷம் மாஸ்டர், சிறுகச் சிறுக கிராமம் கிராமமாக சுற்றித் திரிந்து சுதந்திரம் பற்றிய சிந்தனைத்தீயை வளர்க்கலானார்.

குச்சவெளிப் பொலிஸ்நிலையத்தின்மீது தொடுத்த பாரிய தாக்குதலும், அதன் வெற்றியும் தமிழீழமெங்கும் பெரும் புயலெனப் பரவியது. இந்தத் தாக்குதலின் வெற்றியைத் தொடர்ந்து ஏராளமான இளைஞர்கள் போராட்டத்துடன் தம்மை இணைத்துக் கொள்ள முன்வந்தனர். நூற்றுக்கணக்கான போராளிகள் உருவாகினர். பதினேழு புலிகளுடன் திருமலைக் கரை வந்தடைந்த அணி பல மடங்கில் பெருகக் காரணமாயிருந்தவர் சந்தோஷம் மாஸ்டரே. திரியாய்க்கு அருகேயுள்ள கல்லிறவு எனுமிடத்தே சிறிலங்கா இராணுவத்தினரிடம் இருந்து எப். என். சி. என்ற நவீன ஆயுதம் சந்தோஷம் மாஸ்டர் தலைமையிலான குழுவினரால் கைப்பற்றப்பட்டது. பரவலாக கண்ணிவெடிகளால் திருக்கோணமலை மாவட்டம் அதிரவைக்க அத்திவாரமாக இருந்தவரும் சந்தோஷம் மாஸ்டரே.

சந்தோஷம் மாஸ்டரின் பாசறையில்வளர்ந்தவர்களின் பட்டியல் போட்டால் அது மிக நீண்டதாகவே இருக்கும்; எனினும் குறிப்பிடக்கூடிய சிலரைத் தொட்டுக் காட்டுவது இங்கு பொருத்தமானது. மூதூர் பிரதேச தளபதிமேஜர் கணேஸ், மூதூர் பிரதேச தளபதி மேஜர் கஜேந்திரன் திருமலைப்பிரதேசதளபதி மேஜர் சுரேந்திரன், தளபதி மேஜர் சுரேஸ், தளபதி மேஜர் மதி, திருமலைப் பிரதேச மேஜர் கமல் போன்றோரை பாசறையில் பயிற்றுவித்து தமிழீழப் போராட்டத்தில் பங்களிக்க வைத்தவர் சந்தோஷம் மாஸ்டர்.

1977ஆம் ஆண்டில் யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் மாணவனாக இணைந்துகொண்ட உமைநேசன், இங்கேதான் சந்தோஷம் மாஸ்டராக பரிணமித்தான். பல்கலைக்கழகக் கல்வியுடன் கூடவே, தேச விடுதலைக்காக தன் பங்களிப்பையும் நல்கலானான். யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து வெளியிட ஆரம்பிக்கப்பட்ட ‘உணர்வு’ இதழை ஆரம்பித்தவர்களில் இவரும் ஒருவர். தமிழீழ மக்களின் வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய திருநெல்வேலிக் கண்ணிவெடித் தாக்குதலிலும் பங்குகொண்ட சந்தோஷம் மாஸ்டர் தாயகத்தின் விடியலை விரைவுபடுத்தும்நோக்கோடு திருமலை மாவட்டத்தில் பணியாற்றப் புறப்பட்டார்.

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலில் சிறப்புமிகு பங்காற்றியிருந்த சந்தோஷம் மாஸ்டர் திருக்கோணமலை மாவட்டத்தில் இயக்கத்தின் வளர்ச்சிக்கு அளப்பெரும் சேவையாற்றியிருந்தார். காலம்வரும், நேரம்வரும், தமிழர் வாழ்வில் வெளிச்சம் வரும், விடுதலைப் புலிகளின் வீரம் அதைப் பெற்றுத் தரும் என்று முழங்கி அரும்புகளும்கூட ஆயுதம் தாங்கி அந்நியரை விரட்ட வேண்டும் எனப் போதித்த வேங்கை சந்தோஷம் மாஸ்டர்.

1987 இல் ஒப்பந்தப் போர்வைக்குள் ஒளிந்துகொண்டு வந்தஆக்கிரமிப்புஇந்தியஇராணுவத்துடனான மோதலின் போது கோப்பாயில் வீர மரணமடைந்த சந்தோஷம் மாஸ்டரின் நினைவுகள் என்றும் நிலைக்கும். கோப்பாய்ப் பகுதியில் இந்திய அமைதிப் படையினருடன் இடம்பெற்ற மோதலின்போது எதிரியின் எறிகணையின் சிதறு துண்டுக்கு இலக்காகி உயிர் துறந்தாலும், அம் மாவீரனின் ஆசைகளையும் இலட்சியத்தையும் வென்றெடுக்க ஆயிரமாயிரம் வீரர்கள் களத்தில் உள்ளனர்.

மரணித்த வீரனே
நீ நடந்த
அடிச்சுவடுகள்
நாளைய சந்ததியின்
அரிச்சுவடிகளாகும்!
விரும்பிய விடுதலையை
நாட்டிட
அரும்புகளும் ஆயுதம்
ஏந்தும்!!

---

# பாக். தேர்தலைக் கண்காணிக்க
# “சார்க்” கண்காணிப்பாளர்கள்

(லாகூர்)

பாகிஸ்தானில் வரும் 24 ஆம் திகதி இடம் பெறவுள்ள பொதுத் தேர்தலைக் கண்காணிக்க சார்க் நாடுகளின் கண்காணிப்பாளர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இக் கண்காணிப்பாளர் குழுவில் இடம் பெறவுள்ளனர். சுமார் 20 மாத காலமாக ஆட்சியில் இருந்த பாகிஸ்தான் மக்கள் கட்சியில் பெனாசிர் பூட்டோவின் தலைமையிலான அரசாங்கம் ஜனாதிபதி குலாம் இஷார்க்கான் அவர்களால் பதவிநீக்கம் செய்யப்பட்டதை அடுத்து இப்பொதுத்தேர்தல் இடம் பெறுகின்றது.

பாகிஸ்தான் மக்கள் கட்சியினால் லாகூரில் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் பெனாசிர் பூட்டோ நேற்று முன்தினம் கலந்து கொண்டார். இலட்சக்கணக்கான ஆதரவாளர்களும் பொதுமக்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். இந்தப் பொதுத்தேர்தலில் பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு வெற்றி வாய்ப்புகள் பிரமாதமாக இருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# முன்னாள் பிரதமர் எட்வேர்ட் கீத்
# ஈராக் விஜயம்

(லண்டன்)

ஈராக்கில் சிக்குண்டு இருக்கும் பிரிட்டன் வாசிகளில் நோயாளர்கள், வயதானவர்கள், மற்றும் பெண்கள், குழந்தைகள் ஆகியோரை மீட்டுவரும் முயற்சியில் முன்னாள் பிரிட்டன் பிரதமர் எட்வேர்ட் கீத் பாக்தாத் செல்கின்றார். தொழிற் கட்சியைச் சேர்ந்தவரான எட்வேர்ட் கீத் மார்க்கிரட் தட்சர் அம்மையாருக்கு முன்னர் பிரிட்டனின் பிரதமராக இருந்தவர். ஈராக்கினால் குவைத் கைப்பற்றப்பட முன்னர்ஈராக்கிலும், குவைத்திலும் இருந்த பிரித்தானிய வாசிகள் தற்போது ஈராக்கிலிருந்து வெளியேற முடியாத நிலையில் உள்ளனர்.

எட்வேர்ட் கீத்தின் இவ் விஜயம் பற்றி ஈராக்கிய அதிகாரிகளுடன் முன்னர் எட்வேர்ட் கீத் தொடர்பு கொண்ட போது ஒருவாரம் தாமதிக்கும்படி கோரப்பட்டிருந்தது. எட்வேர்ட் கீத் அவர்களை வரவேற்கும் ஒழுங்குகளை மேற்கொள்ளவே மேற்படி கால அவகாசம் தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் லண்டனிலிருந்து புறப்பட்டுள்ள திரு. கீத் ஜோர்தான் சென்று மன்னர் ஹுசைனைச்சந்தித்த பின்னர் அங்கிருந்து பாக்தாத் செல்ல உத்தேசித்துள்ளார்.

ஆனால் திரு எட்வேர்ட் கீத் தமது முயற்சியில் எத்தகைய வெற்றியை ஈட்ட முடியும் என்பதில் அரசியல் அவதானிகள் பலரும் அவநம்பிக்கையே கொண்டுள்ளனர். இரும்பு மனிதரான ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனின் முன்பாக வயது முதிர்ந்து உடல் தளர்ந்து போயுள்ள எட்வேர்ட் கீத் எதைச்சாதிக்க முடியும் என பிரிட்டனிலேயே கீத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்போர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## வீரமரணமடைந்த போராளிகளின்

# இலட்சியத்தை நிறைவேற்ற மக்கள் தாமாகவே முன்வர வேண்டும்

(அலுவலக நிருபர்)

'கொண்ட கொள்கைக்காக நிலைதளராத உறுதியுடன் போராடி வீரமரணமடைந்த இவ்வீரவேங்கைகளுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதுடன் மட்டும் நின்றுவிடாது அவர்கள் எந்த இலட்சியத்திற்காக வீரமரணமடைந்தார்களோ அவ்விலட்சியத்தினை அடைவதற்காக பொதுமக்கள் அனைவரும் தாமாகவே தமது பங்களிப்பை வழங்க முன்வரவேண்டும்'.

இவ்வாறு நேற்றுமாலை ஈச்சமோட்டை'சனசமூகநிலையத்தில், பலாலி இராணுவத்துடனான நேரடிமோதலில் வீரமரணமடைந்த அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் மேஜர் அன்ரனி, இளம்புலி நஸார், பெண்புலி ஆர்த்தி ஆகியோரின் அஞ்சலிக்கூட்டத்தில் உரையாற்றிய யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் குறிப்பிட்டார்.

மேலும்விடுதலைப்போராட்டத்தில் நம்பிக்கை கொண்டு வீண்வதந்திகளை அகற்றி தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முற்றுமுழுதாக நாமனைவரும் ஒன்றுபட்டுப் பங்கு கொள்வோமாயின் எந்தவொரு சக்தியாலும், எந்தவொரு யுக்தியாலும் எம்மை அடிபணியவைக்கமுடியாது. விடுதலைப் புலிகள் தலைமையின் தீர்க்கதரிசனம் போராளிகளின் தியாகம் இவற்றுடன் மக்களின் நூற்றுவீதம் பங்களிப்பும் இருக்குமேயானால் இவ்வேங்கைகளின் இலட்சியக் கனவு விரைவில் நனவாகமுடியும் என்றார்.

தொடர்ந்து மக்கள் முன்னணியின் அரசியற்பிரமுகர் திரு. தேவர் உரையாற்றும் போது.

யாழ்.மாவட்டத்தைதப்பாதுகாக்க யாழ். மாவட்ட இளைஞர்கள் அவசியம் தேவை. தமிழீழப் போராட்டம் வெற்றிபெற்று நாமனைவரும் சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க வேண்டுமாயின் இனிமேலும் தொலைவில்நின்று,வேடிக்கை பார்க்காது உடன் எம்முடன் இணையவேண்டும். இதுவே மரணித்த போராளிகளுக்கு நீங்கள் செய்யும் அஞ்சலியுமாகும் என்றார்.

இக்கூட்டத்தில்சிற்றூரவை, வட்ட அவைகளைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் பலரும்உரையாற்றினார்கள். (மு)

## வலிகாமப் பகுதியில் பரவலாக ஹெலித் தாக்கு

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை, மல்லாகம், சுன்னாகம், மருதனாமடம் போன்ற பகுதிகளை நோக்கி நேற்றுப் பரவலாக சிறிலங்கா விமானப்படை ஹெலிகொப்டர்கள் கடும் கலிபர் தாக்குதலை நடத்தியுள்ளன.

இத் தாக்குதலில் ம. இராசு (வயது 33) என்பவர் காயமடைந்தார். இப் பகுதிகளில் உள்ள வீடுகளின் சில ஓடுகள் உடைந்த நிலையில் காணப்பட்டதுடன் வீதிகளிலும் சிறு குழிகளை அவதானிக்க முடிந்தது. (க)

## மல்லாகத்தில் ஒருவர் பலி

(மல்லாகம்)

மல்லாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் கிளி (வயது 20) என்பவர் கொல்லப்பட்டுள்ளார். இவரது சடலம் நேற்றுக் காலையே கட்டட இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டது. (க)

---

### வலிகாமம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திசை நோக்கி தொடர்ச்சியான ஆட்டிலறி ஷெல் தாக்குதல் இடம் பெற்றன. அத்துடன் வீதி ரோந்தில் ஹெலி ஈடுபட்டிருந்தது. இது பாதசாரிகளையும், வாகனங்களையும் குறி வைத்த வண்ணம் தொடர்ச்சியான கலிபர் தாக்குதல்களை நடாத்தியது.

இவற்றுடன் இரண்டு பொம்மர்களும், அவ்ரோ ஒன்றும் திசை மாற்றும் நடவடிக்கையாக மல்லாகம். ஏழாலைப் பகுதிகளை மையமாகக் கொண்டு வழமை போல் தமிழ் மக்களின் சொத்துக்களை அழிக்கும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. (ச)

---

### மல்லாகத்தில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலத்த காயமடைந்த நிலையில் மானிப்பாய் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இத்தாக்குதலினால் மல்லாகம் மகாவித்தியாலயம்பலத்த சேதமடைந்துள்ளது. இதன் தளபாடங்கள் தூக்கி வீசப்பட்டுள்ளன. மற்றும் எரிபொருள் நிலையம், பஸ்தரிப்பு நிலையம், 5 கடைகள், 4 வீடுகள் ஆகியன பலத்த சேதமடைந்து காணப்படுகின்றன.

மல்லாகம் சந்தியில் கடந்த 24 மணி நேரத்துள் நடந்த இரண்டாவது சம்பவம் இதுவாகும். (ச)

---

### சந்திப்பு

ளது. நாளை (22-10-90) திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ். சாதனா பாடசாலையில்இடம்பெறும்இச்சந்திப்பில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

---

### மேஜர் அன்ரனிக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் பிற்பகல்நான்குமணி வரை வைக்கப்பட்டிருந்தன.

பெருந்தொகையாகத் திரண்டு வந்த பொதுமக்கள் கியூவரிசையில் நின்று தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பல தடவை வானில் ஹெலி வட்டமிட்ட போதும் மக்கள் நிலைகுலையாது நின்று தமது அஞ்சலியைச் செலுத்தியமை குறிப்பிடத் தக்கது. யாழ் நகரப் பகுதியெங்கும் வீரவேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக வீதிகள் தோறும் தோரணங்கள், வாழை மரங்கள், கறுப்புக் கொடிகள் என்பன கட்டப்பட்டிருந்தன.

இதன் பின் வீரவேங்கைகளின் புகழுடல்கள் அலங்கரிக்கப்பட்ட திறந்த வாகனங்களில் பாண்ட் வாத்திய சகிதம், விடுதலைப் புலிகளின் இராணுவ அணி வகுப்புடன் புங்கன்குளம் வீதி, கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதி வழியாக கோட்டைப் பகுதிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

இறுதியாக கோட்டைப் பகுதியிலுள்ள வேங்கைகள் அடக்கம் செய்யப்படும் புனிதப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் இராணுவ வேட்டு மரியாதையுடன் வீரவேங்கைகள் மூவரினது புகழுடல்களும் தீயுடன் சங்கமமாயின.

---

## சிப்பாய் காலை இழந்தார்

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் மிதிவெடியில் சிக்கி தமது கால் ஒன்றை இழந்தார். சிங்கபுர இராணுவ முகாம் அருகில் தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட மிதிவெடியில் கடந்த புதனன்று சிக்கிய சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவரே இவ்வாறு தமது கால் ஒன்றை இழந்தார். (மு)

## ஷெல் தாக்குதல்

மன்னார் மாவட்டம் தள்ளாடி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப் பட்ட ஷெல் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் காயமடைந்துள்ளனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க)

---

### வீரமரணமடைந்த

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கந்தையா(கரவெட்டி), தமிழ்ச்செல்வன் (மன்னார்), மரியதாஸ் (வல்வெட்டித்துறை) ரகு(அளவெட்டி), அனுஷன் (தெல்லிப்பளை), சீனன் (நீர்வேலி), நஸார் (மட்டக்களப்பு) செல்வம் (பருத்தித்துறை) சுகந்தன் (முல்லைத்தீவு) சின்னமணி உரும்பராய்), அமுதன் (உரும்பராய்), மூபின் (இளவாலை), சேனாட்(நாகர் கோயில்), சதீஸ்(வல்வெட்டித்துறை), பற்றீசியா (முல்லைத்தீவு), ஆர்த்தி (ஆரையம்பதி) அன்ரனி(கல்முனை)இந்த இருபத்திநான்கு வீரவேங்கைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (மு)

---

### இரு டாங்கிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சகல இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

இச்சண்டையில் சிறிலங்கா இராணுவத்தினரின் ஐந்து படையணிகளும், விமானப் படை, கப்பற்படைகளும் ஈடுபட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆறாவது கஜபாகு படைப்பிரிவு, நான்காவது கஜபாகு படைப்பிரிவு, மூன்றாவது காலாட்படைப் பிரிவு, நான்காவது சிங்கபாகு படைப்பிரிவு, ஆறாவது பொறியியற்படைப்பிரிவு என்பனவே இச்சண்டையில் ஈடுபட்டுள்ளதாக கொழும்பில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

### தரமற்ற

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குச்சேவை செய்ய வேண்டியநிலையில் வேகாதபாணை விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப் படும்என்று திரு. மகாதேவன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொதுஇடங்களில்பாணைக் கண்டபடி இலையான், ஈக்கள் மொய்க்காத படி சுகாதார முறைப்படி வைத்து விற்பனை செய்யுமாறு அவர் வியாபாரிகளைக் கேட்டுள்ளார். (24)

---

## பிரிட்டன் இடைத்தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி தோல்வி

(லண்டன்)

பிரிட்டன் நாடாளுமன்றத்தின் ஈஸ்ட்ஹாம் தொகுதிக்கு நடந்த இடைத்தேர்தலில் லிபரல் ஜனநாயகக் கட்சி வேட்பாளா பெரும் வெற்றியீட்டியுள்ளார். ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளர் பெற்ற வாக்குகளைக் காட்டிலும் இருமடங்கு வாக்குகளை லிபரல் ஜனநாயகக் கட்சி பெற்றுள்ளது. கடந்த சுமார் எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக கன்சர்வேட்டிவ் கட்சியினால் பிரதிநிதித்துவம் செய்யப்பட்ட இத்தொகுதி தற்போது கைநழுவிப் போயுள்ளது.

பிரிட்டனில் ஜனநாயக வரலாற்றில் கன்சர்வேட்டிவ் கட்சிக்கும் தொழிற்கட்சிக்கும் இடையிலேயே போட்டிகள் இடம்பெறுவது வழமையாக இருந்தது. தற்போது லிபரல் ஜனநாயகக் கட்சி பெற்றுள்ள வெற்றியானது மூன்றாவதான ஒரு சக்தியின் உதயம் என அரசியல் அவதானிகளால் வர்ணிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் மீதும், பிரதமர் மார்க்கிரட் தட்சர் மீதும் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியின் வெளிப்பாடாகவும் இத் தேர்தல் முடிவு கொள்ளப்படுகின்றது. குறிப்பாக அண்மைக் காலத்தில் பிரிட்டனில் விலைவாசிகள் அதிகரித்திருப்பது மக்களின் அதிருப்திக்குக் காரணமாக இருக்கலாம்எனக் கருதப்படுகின்றது.

## எதிர்பார்த்ததை விட இந்தியா கூடுதலாக அளித்துள்ளது

### கல்கத்தாவில் நெல்சன் மண்டேலா

(கல்கத்தா)

'நாம் எதிர்பார்த்ததை விடவும் இந்தியா அதிகமான அளவில்எமக்குஅளித்துள்ளது' இந்தியாவுக்கான நான்கு நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு இந்தோனேசியாவிற்குப் புறப்படும் முன்னர் கல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் நெல்சன் மண்டேலா.

ஆபிரிக்க தேசிய காங்கிரசின் உபதலைவரும், தென்னாபிரிக்க சுதந்திரப் போராட்ட வீரருமாகிய திரு. நெல்சன் மண்டேலாவுக்கு இந்தியாவில் உத்தியோக பூர்வ வரவேற்பளிக்கப்பட்டமை தெரிந்ததே. இந்தியாவின் அதிஉயர் விருதாகிய 'பாரத ரத்னா' விருது வழங்கப் பெற்று கௌரவிக்கப்பட்ட திரு. நெல்சன் மண்டேலாவிடம் தென்னாபிரிக்க மக்களின் போராட்டத்திற்கு உதவியாக50 லட்சம் டாலர் உதவித் தொகையாக இந்திய அரசினால் கையளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

புதுடில்லியிலிருந்து ஆக்ரா ஊடாக கல்கத்தா சென்றடைந்த நெல்சன் மண்டேலா அங்கிருந்து ஜகார்த்தாவிற்குப் பயணமானார்.

## அதிகாரிகள் சந்திக்கவும்

(யாழ்ப்பாணம்)

மூன்கூட்டியே தொடர்பு கொண்டு தமது அலுவலக ஊழியர்களுக்கான மாதாந்த வேதனக் கொடுப்பனவுக்காகப் பணம் பெற ஒழுங்குகளை மேற்கொண்டுள்ள யாழ். இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் கணக்குவைத்திருக்கும் அரச திணைக்களக் கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்த சகல அதிகாரிகளையும் நாளை திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு வங்கி அலுவலகத்தில் தவறாது சமுகமளிக்குமாறு பிரதான முகாமையாளர் கேட்டுக்கொள்கின்றார். (மு)

## இறந்தோர் தொகை ஏழாக உயர்வு

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளையில் நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை ஏழாக உயர்ந்துள்ளது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்து சிகிச்சைபெற்றுவந்த வ. செல்லம்மா (வயது 68) என்பவர் நேற்று மரணமானதைத் தொடர்ந்தே இந் எண்ணிக்கை உயர்ந்தது. (க)

## கட்டுவனில் மூவர் காயம்

(கட்டுவன்)

கட்டுவனில் இருந்து அண்மையில் இடம்பெயர்ந்தவர்கள் தமது வீடுகளை பார்வையிட சென்றபோது சிறிலங்கா இராணுவத்தினர் இவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூவர் காயமடைந்தனர்.

நேற்று நண்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வ. பாலசிங்கம் (வயது 34), பொ. சின்னத்துரை (வயது 70), சி. சௌந்தரராஜன் (வயது 32) ஆகியோர் பலத்த காயமடைந்த நிலையில் மானிப்பாய் போதனா மருத்துவமனைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க

---

### புலிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. படையினரின் உயிரிழப்புகள் பற்றிய சரியான எண்ணிக்கை இதுவரை தெரியவில்லை. (க)

## 3 மாதங்களாக சம்பளம் இல்லை

(கொழும்புத்துறை)

வடக்குக் கிழக்கு மாகாண சபை அலுவலகத்தில் கடமை ஆற்றும் ஊழியர்களுக்கு கடந்த ஆனிமாதம் முற்பணமாக ஆயிரம் ரூபாவும், ஆடி மாதம் முழுச் சம்பளமும் கிடைத்துளளது.

இருந்தும் இந்த அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்குக் கடந்தமூன்றுமாதங்களாக வேதனம் வழங்கப்படவில்லை.

கடந்த மூன்று மாத வேதனமும் இன்றிப்பலத்த கிரமத்தின் மத்தியில் தமது வாழ்க்கையை நடாத்துவதாக அங்கு கடமையாற்றும் ஊழியர் சிலர் எமது நிருபருக்கு தெரிவித்துள்ளார். (24)

## அஞ்சலிக் கூட்டம்

(கொழும்புத்துறை)

தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியமும், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையும் கூட்டாக இணைந்து நடாத்தும் இடம் பெயர்ந்தோர் முகாமிற்கு தினசரிஅன்பளிப்பாக மரக்கறி, மற்றும் ஏனைய பொருள்களை வழங்கும் சந்தை வியாபாரிகளின் அகால மரணத்திற்கு அஞ்சலிக் கூட்டம் அண்மையில் நடாத்தப்பட்டது.

மட்டுவில் மகாவித்தியாலத்தியாலயத்தில் அஞ்சலிக் கூட்டமும், மௌனப் பிரார்த்தனையும் பேரவைத் தலைவர் திரு. வே. கெ. தனபாலன் தலைமையில் நடைபெற்றது. (24)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.